393

# போதனு விஷய பூங்கொத்து

ாதமொருமுறை மலரும்




SEP 1946

Editor & Publisher: ... A. Lourduswami, B.A., L.T.
R.C. ... Training School, Trichinopoly.

... ஜூலை 1946 மலர் 1

... றை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு 2.

3L
ஊ211, NUPP
M46.37.1
210003

# போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 37] 15 ஜூலை 1946 [மலர் 1


## பத்திராதிபர் குறிப்புகள்

**பூங்கொத்தின் புது வருடப் புதுமலர்.** இந்த ஜூலை மாதத்திலிருந்து நமது "பூங்கொத்தின்" 37-வது ஆண்டு தொடங்குகின்றது. அதன் முதல் மலர் இது. இதுகாறும் நம் "பூங்கொத்தை" அன்புடன் ஆதரித்து வந்துள்ள நம் பழைய மாணவர்கட்கும், ஏனைய சந்தாதாரர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இதுவரை இதனைப் போற்றி வந்திருப்பதுபோல் இனிமேலும் நம் "பூங்கொத்தைப்" பரிவுடன் போற்றி வருவதுடன் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தும், விஷயதானங்கள் புரிந்தும் தங்கள் அன்பையும் அபிமானத்தையும் அதிகரித்துக்கொள்ளுமாறு நம் நேயர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**T. S. L. C. பரீட்சை 1946. "எலிமேண்டரி கிரேடு"**

இப்பரீட்சையில் நம் பாடசாலை ஸெக்கண்டரி கிரேடு மாணவர்கள் வெகுத் திறமையுடன் 92% தேறியிருப்பதுபோலவே, நம் "எலிமெண்டரி கிரேடு மாணவர்களும்" ஷை பரீட்சையில் 92% பெற்று வெகுத் திறமையாய்த் தேறியிருப்பதைப்பற்றி, அன்னவர்க்கு எமது மனமார்ந்த மகிழ்ச்சியையும் ஆசியையும் இதன் மூலம் கூறுகின்றோம். விவரம் மற்றோரிடத்திற் காண்க.

ஷை பரீட்சையில் எலிமெண்டரி கிரேடில் முதன்மை மார்க்கு பெற்றுள்ள M. அருளப்பன், K. M. மரியண்ணன் ஆகிய இவ்விருவர்க்கும் நம் பாடசாலைத்தினக் கொண்டாட்டத்தன்று வழக்கம்போல் **பதக்கப்பரிசு** அளிக்கப்படும்.

அடுத்த ஆகஸ்டு மாதம் 12, 13, 14-ம் தேதிகளில் வழக்கம்போல் தியானம் நம் பாடசாலையில் நடைபெறும். அச்சமயம் தியானம் செய்ய விரும்பும் நம் பழைய மாணவர்கள், தத்தம் விருப்பத்தை முன்னதாகவே இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு எழுதித் தெரிவித்துவிடக்கடவர். நம் பழைய மாணவர்கட்கு மாத்திரம் ஷை தியான நாட்களில் குறைந்த சார்ஜில் போஜன முதலிய வசதிகள் அளிக்கப்படும் என்பதையும் அறிக.

New admissions : ஸெக்கண்டரி கிரேடு Emergency Course வகுப்பில் 40 மாணவர்களும், எலிமெண்டரி கிரேடில் வழக்கம்போல் 80 மாணவர்களும், நம் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

---

SEP 1946

### விகடம்

கணவன் :—“ முட்டாள்கள்தான் அழகிய பெண்களை மணந்து கொள்ளுகின்றனர் !!

மனைவி :— “ நான் அழகாயிருக்கிறேனென்றுதானே அப்படி சொல்லுகிறீர்கள் ”

*   *   *   *

ஒருவள் :—“ என் கணவனை நான் நீக்கிவிடப்போகிறேன். அவர் குணம் ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை.

மற்றவள் :— “ அப்படியானால், அவர் உனக்கு போட்டுள்ள நகை நட்டுகளையெல்லாம் திருப்பிக்கொடுத்துவிடுவாய் அன்றோ ? ”

ஒருவள் :— “ இல்லை ! அவைகள்மீது எனக்கொரு குறையுமில்லை.

---

210003
600 008

# Results of the T. S. L. C. Examination April, 1946

## Elmentary Grade

| S. No. | Register No. | Names | P.C. of Marks |
|---|---|---|---|
| 1. | 5147 | S. Antony | 41 |
| 2. | 5148 | S. Adaikalam | 42 |
| 3. | 5149 | P. Pitchaimuthu | 49 |
| 4. | 5150 | A. Maria Sellasamy | 45 |
| 5. | 5151 | Z. Arputham | 39 |
| 6. | 5152 | S. Antonysamy | 44 |
| 7. | 5153 | K. Rajangam | 43 |
| 8. | 5154 | S. Arulanandam | 42 |
| 9. | 5155 | S. Krishnasamy Alias Gnanapragasam | 37 |
| 10. | 5156 | V. Susaimanickam | 42 |
| 11. | 5157 | S. Seetharaman | 43 |
| 12. | 5158 | M. Packiam | 45 |
| 13. | 5159 | Paramasivam Alias S. Xavier Chelliah | 33 |
| 14. | 5161 | A. Annamalai | 40 |
| 15. | 5162 | R. Arockiam | 43 |
| 16. | 5163 | S. Irudayam | 44 |
| 17. | 5164 | J. Arockiasamy | 45 |
| 18. | 5165 | K. Periasamy | 37 |
| 19. | 5166 | A. Sammanasu | 41 |
| 20. | 5167 | M. Johndoss | 42 |
| 21. | 5168 | G. Arockiam | 39 |
| 22. | 5169 | M. Gnanapragasam | 35 |
| 23. | 5171 | Marimuthu Alias K. Maria George | 40 |
| 24. | 5172 | G. Rayappan | 38 |
| 25. | 5173 | A. Zacharias | 42 |
| 26. | 5174 | S. Sundaram | 45 |
| 27. | 5175 | G. Krishnamurthi | 44 |
| 28. | 5176 | A. Sebastian | 49 |
| 29. | 5177 | Chinnamuthu | 47 |
| 30. | 5178 | I. Arputham | 35 |
| 31. | 5179 | M. Arul | 39 |
| 32. | 5181 | S. Arockiasamy | 47 |
| 33. | 5182 | M. Kulandasamy | 47 |
| 34. | 5184 | V. J. Devesahayam | 41 |
| 35. | 5185 | P. Balakrishnan | 40 |
| 36. | 5228 | S. Antony | 43 |
| 37. | 5230 | E. Amirtham | 39 |
| 38. | 5231 | V. Narayanasamy | 42 |
| 39. | 5232 | M. Arulappan | **50** |
| 40. | 5234 | I. Kulandasamy | 45 |
| 41. | 5235 | G. Arulrayan | 35 |
| 42. | 5188 | A. Dorai Raj | 37 |
| 43. | 5189 | S. Chinnappan | 44 |
| 44. | 5090 | M. Allapitchai | 37 |
| 45. | 5091 | S. Antonimuthu | 37 |
| 46. | 5192 | R. Veeramuthu | 40 |
| 47. | 5193 | R. Ramachandran | 43 |
| 48. | 5194 | S. Kaliyan | 37 |
| 49. | 5195 | V. Narayanasamy | 46 |
| 50. | 5196 | A. Subramanian | 41 |
| 51. | 5197 | A. Arunachalan | 37 |
| 52. | 5198 | N. Alagirisamy | 46 |
| 53. | 5199 | K. M. Mariannan | **50** |
| 54. | 5200 | K. K. Noor Mohamed | 36 |
| 55. | 5201 | R. Arockiasamy | 43 |
| 56. | 5202 | A. Samundian | 43 |
| 57. | 5203 | M. Peter Philomin Raj | 37 |
| 58. | 5204 | T. A. Mookan | 44 |
| 59. | 5206 | S. Arputham | 47 |
| 60. | 5207 | S. N. Kandasamy | 47 |
| 61. | 5208 | I. Arockiam | 44 |
| 62. | 5209 | S. Mariadoss | 38 |
| 63. | 5210 | M. Swaminathan | 33 |
| 64. | 5212 | S. Gnanavarnan | 40 |
| 65. | 5213 | M. Savarimuthu | 38 |
| 66. | 5214 | S. Irudayaswamy | 34 |
| 67. | 5216 | D. Selvaraj | 36 |
| 68. | 5217 | R. Thomas | 40 |
| 69. | 5218 | A. Arokiasamy | 40 |
| 70. | 5219 | A. Savarinathan | 33 |
| 71. | 5220 | P. S. Arockiam | 35 |
| 72. | 5222 | S. Samidurai | 37 |
| 73. | 5223 | P. Sandanam | 36 |
| 74. | 5224 | P. Devasahayam | 35 |
| 75. | 5225 | K. R. Arockiam | 37 |
| 76. | 5226 | M. Palaniandi | 33 |
| 77. | 5608 | A. Susai | 37 |
| 78. | 5609 | M. Francis | 39 |
| 79. | 5710 | M. Sebastian | 34 |
| 80. | 5773 | S. Raphael | 38 |
| 81. | 5146 | M. Siluvaimuthu | 37 |
| 82. | 5453 | S. Arpudam | 38 |
| 83. | 5534 | Y. Savary | 41 |
| 84. | 5535 | M. Arockiam | 32 |
| 85. | 5907 | S. Belevendram | 34 |
| 86. | 5842 | P. Jebatheyu | 38 |
| 87. | 5843 | M. Peter A. Kulanda-samy | 45 |
| 88. | 5353 | R. Kanickam | 46 |
| 89. | 6043 | N. Rayappan | 36 |

## Failures

The groups in which these failed will be announced later

| | | |
|---|---|---|
| 1. | 5160 | I. James Masilamoney |
| 2. | 5170 | B. Abdul Razach |
| 3. | 5180 | L. S. Ramachandran |
| 4. | 5183 | B. Chinnasamy |
| 5. | 5186 | M. Periasamy |
| 6. | 5229 | M. Manickam |
| 7. | 5233 | O. Maria Sockeen |

OLD STUDENTS

| | | |
|---|---|---|
| 8. | 5205 | R. Sambasivam |
| 9. | 5211 | B. Soosaimanickam |
| 10. | 5215 | V. Natarajan |
| 11. | 5221 | Y. Savarimuthu |
| 12. | 5227 | E. Thathan |
| 13. | 5908 | V. Gnanadickam |

## Details of failures in the Secondary Grade

(For list of passes, please see last issue)

| Reg. No. | Names | Groups in which failed |
|---|---|---|
| 862 | R. Thiagarajan | A B |
| 866 | S. Jegadoss | A B |
| 871 | S. John Ratnasamy | A B |
| 896 | S. Chinnappa | A B |
| 897 | S. Mookan | A B |

---

### பெற்றோர் சங்கம்

" ஸ்ரீரங்கம் கொல்லம்பட்டரை, எலிமெண்டரி பாடசாலையில் சனிக்கிழமை (29—6—46) மாலை 4 மணிக்கு ஒரு பெற்றோர்சங்கக் கூட்டமானது நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீரங்கம் உயர்தரப்பள்ளி கே. எஸ். சீனிவாசய்யர் B. A., L. T., அவர்கள் " பெற்றோர்களும் அவர்களின் கடமையும் " என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றினார். ஸ்ரீரங்கம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் A. L. நரசிம்மய்யர் B. A., அவர்கள் தலைமை வகித்தார். Convened by R. Bashyam, Typewriting Instructor, The High School, Srirangam and by the members of the staff. "

---

# “ கடமை ”

## (M. A. S. Udaiyar, T. P.)

நில உலகில் பிறந்து உயிர் வாழும் ஆன்ம கோடிகள் நம்மைப் படைத்த இறைவன் திருவுளத்திற்கியையத் தம் வாழ்க்கையில் தவருது ஒழுகுதலையே ஆன்ருேர் கடமை என்பர்.

ஆனல் கடமை என்பது மன்னுயிர் அனைத்திற்கும் பொதுவாக இருப்பினும் ஐயுணர்வோடு மெய்யுணர்வாம் பகுத்தறிவினையும் கொண்ட மக்கட்கே பெரும் பகுதியாகச் சிறப்பித்துக் கூறப்படும். ஏனைய விலங்குகள் முதலியவையும் தத்தம் கடமையைச் செய்கின்றனவே என்ருல் அவை பகுத்துணர்வோடு அக்கடமையை நிறைவேற்றுதல் இல்லை.

இனிப் பகுத்துணர்வுடைய மக்கள் தம் வாழ்க்கையில் எந்தக் காலத்தில் எந்தப் பருவத்தில் எந்த இடத்தில் எந்த சந்தர்ப்பத்தில் என்ன செய்யும் தகுதியுடையராக இருக்கின்ருர்களோ அதை அவர்கள் செய்தே தீரவேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவராயின் அவர் மக்களென்று கருதப்படாராய் மாக்களாகவே கருதப்படுவர். இக்கருத்துபற்றியே ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருகிய ஜீவகசிந்தாமணியை இயற்றிய திருதக்கதேவர் தம் நந்தாமணியாகி சிந்தாமணியில்

“ தக்க வின்ன தகாதன இன்னவென் (று)
ஒக்க உன்னல ராகில் உணர்வுடை
மக்களும் விலங்கே மனுவின்னெறி
புக்கவே லவ் விலங்கும் புத்தெளிரே ”

என்று கூறுகின்ருர். அஃதாவது செய்யத் தகுவன இவை செய்யத் தகாதன இவை என்று ஒன்றுசேர்த்துப் பகுத்துணர்தலைப் பெருர் ஆயின் ஆறு அறிவுடைய மக்களாயினும் அவர் விலங்கினமேயாவர். விலங்கினம் அப் பகுத்துணர்வைப் பெறுவனவேல் மக்களினத்தோடுயர்த்தப்படுதலன்றி அவை தேவரினமேயாம் என்பது. இதினின்று நாம் உணர்வது, ஐயறிவுடைய மக்களாகிய நாம் ஒவ்வொருநாளும் கடமையுணர்ந்து அல்லன நீக்கி நல்லன செய்து நலம்பெறுந் துறைபுக்கு உலப்பில் ஆனந்தமாய உயர்வீடு பெறுதற்குத் தகுதியடைதலோடு இம்மையின்பமும் எய்துதல் வேண்டும் என்பதாம். இறையருள் பெருக.

# கணிதப் பகுதி

## Part I

## M. Kulandaisamy, Palayam.

கூட்டல் சேர்க்கைகளை விரைவாகச் செய்விக்க அனுசரிக்க வேண்டிய விதிகள் :—

(1) மூலாதார கூட்டல் சேர்க்கை (100)-களில் ஏற்றபடி மாணவர்களுக்கு தேர்ச்சியும் அறிவும் ஏற்படவேண்டும். இதற்காக, பலவித வர்ணமுள்ள பொருள்கள் சக்கரங்கள் சோதனை அட்டைகள் முதலிய, தேவையான உபகரணங்களை உபயோகிக்கவேண்டும்.

(2) சார்ந்த கூட்டல் சேர்க்கை (900)-களில் போதுமான பயிற்சி ஏற்படவேண்டும். இதில் 500 கூட்டல்களில் அதிக அளவு பயிற்சி அளித்தல் அவசியம். ஏனெனில் 5 எண்களுக்கு மேல் பொதுவாகக் கூட்டவேண்டிய சந்தர்ப்பங்கள் வகுப்பில் ஏற்படாது.

(3) கூட்டல் விதிகளை நன்கு கற்பித்திருக்கவேண்டும். அதாவது, ஒரு ஸ்தானத்தின் கூட்டுத்தொகையை அடுத்த உயர்ந்த ஸ்தான எண்ணாக மாற்றவும் மிச்சத்தைக் கவனித்து உபயோகிக்கவும் சரியான உதாரணங்கள் மூலம் பயிற்சியளித்தல்.

(4) 2 ஸ்தான எண்களில் 2 எண்களை கூட்டும் முறையையும் அவசியம் கற்பிக்கவேண்டும். இவற்றைக் கூட்டுவதில் 2 வித முறைகள் அனுசரிக்கத்தகும்.

1. மேல் எண்ணுடன் கீழ் எண்ணின் 10-க்களை கூட்டி வந்ததோடு கீழ் எண்ணின் ஒன்றுக்களை கூட்டுதல்.

2. மேல் எண்ணுடன் கீழ் எண்ணின் ஒன்றுக்களை கூட்டி வந்ததோடு கீழ் எண்ணின் 10-க்களை கூட்டுதல்.

(5) பத்திக் கூட்டல் முறைகளை கற்பிக்கவேண்டும் : அதாவது :— 2 எண்களுக்குமேல் 3, 4, 5, 6 முதலான எண்களை கூட்டுவது முறையே 3, 4, 5, 6 ஸ்தான பத்தில் கூட்டலாகும். இதில் 2 முறைகள் உண்டு. ஒன்று மேலிருந்து கீழாகவும் மற்றொன்று கீழிருந்து மேலாகவும் கூட்டுதல். ஒரு முறை கணக்கு செய்யவும் இன்னொரு முறை சரி பார்க்கவும் உபயோகப்படும்.

(6) கணக்கு செய்யக்கொடுக்கும் நேரத்தைக் குறைக்க வேண்டும். இதனால் மாணவர்களுக்கு கணக்கு செய்வதில் வேகமும் சுறுசுறுப்பும் ஏற்படும். கணக்கில் தேர்ச்சியும் நல் அபிமானமும் ஏற்படும்.

(7) கூட்டலில் அவசியமான இடத்தில் சுருக்கமான வழிகளை உபயோகப்படுத்தலாம்.

(உம்.) 99+55. 99+1=100. 100+54=154. Ans.

(8) கூட்டும்போது 10-க்களை அறிந்து கூட்டவேண்டும். (இது கணக்கு விடை சரி பார்க்கும்போது உபயோகப்படும்.)

(தொடரும்)

---

## விடு கதைகள்

(1) காலே இரண்டு உண்டு, இரண்டு கண்ணும் உண்டு. மேலே இமைத்து விழிக்கு அறியாள் (அந்த மெல்லினல்லாள்). பாலே குடிக்க வகை அறியாள், நித்தம் பாக்குத் தின்பாள். ஆலோசனை செய்து சொன்னவர்க்கே புத்தி அதிகம்.

இது என்ன?

(2) பச்சைப் பசேரென்று இருக்கும் கிளியுமல்ல; பலதாரமும் கொழுந்து கிள்ளும் கொடிக்கால் அல்ல; உண்ணிதமாய் பூ முடிக்கும் வேசி அல்ல; உலகத்தார் புகழும் தெய்வமல்ல; வச்ச சுமை எடுக்க வந்த வண்டி அல்ல; வாய் தனிலே போய் அடையும் வௌவால் அல்ல; வகையுடனே இதன் பெயர் விளம்புவீரே. இது என்ன?

(3) ஆற்று மணலே மணல், அக்ரஹாரத்து கோட்டையே கோட்டை, கன்றுக்குட்டியின் சாணியே சாணி, கறக்கும் பாலே பால். இது என்ன?

(4) முட்டையிடும், சட்டைகழட்டும், மூன்று மாதம் அடகாக்கும். நாக்கு நீட்டும படமெடுக்கும் நல்லதோர் சர்ப்பமில்லை.

(5) பூமியிலே பெண்ணுக்காகப் பிறந்து, பிடிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் கட்டுபட்டு, ஜாதியிலே சின்னமாகி, சண்டைக்கு நிற்பாரோடு முன்னுக்கு நின்று கூட்டிடாத கோவிலெல்லாம் கூட்டி கொண்டையிலே பூ சுத்தாதபாவி. யார்?

---

# சரித்திரம் என்ன பேசுகிறது ?

[ஹென்றி ஸாமுவேல்]

என் இன்னுயிரை ஒத்த சரித்திரமே! நீ என்னுடன் பேசு. உன்னுடன் உரையாடுவதே என் இன்பம! உன் ஜீவநதியில் அனேந்து உன்னை ஆலிங்கனம் செய்வதே என் ஆவல்! ஹா! எத்தனை அரிய காக்ஷிகளை நீ காட்டுகிறாய்? அவைகள் என் தேச பக்திக்கு தூண்டு கோலாயும், ஜீவ தண்ணீராகவுமல்லவா தோன்றுகிறது! ஏ! இன்ப சரித்திரமே!! எங்கே ஒருமுறை எனக்கு உன் இறந்தகால நிகழ்ச்சிகளைக் காட்டு! அவைகள என் வாழ்க்கைக்கு ஓர் அதிக சக்தியை ஊட்டி என்னையும் ஓர் தியாகியாக ஆக்கும்! இதுவே என் நம்பிக்கை! எங்கே? தேவி, காட்டும் உம் கடந்தகால நிகழச்சியை!

ஹா! அதோ ஏகாதிபத்திய வெறிகொண்ட அந்த அசோகன் தன் ஆயுளில் ஒரே யுத்தத்தில் மனந்திரும்பி மனுஷனாகிறான்! ஆனல் அணு குண்டை காட்டி ஆதிபத்தியத்தை நிலைநிறுத்தப் பார்க்கும தற்கால வெறியர்களுக்கு முன் நம் அசோகன் எத்தனை பெரியவனாகக் காட்சியளிக்கிறான் ?

ஸ்தௌ! அரசாளப் பிறந்தும் அவனியிலுள்ளவர்களுக்காக துறவியான கருணைவள்ளல் புத்தரின் ஞானோபதேசம் எங்கே? "ஆசையை ஒழிக்கவேண்டும்" என்னும் கொள்கை—கூக்குரல் ஏகாதிபத்தியத்தின் செவிக்கும், முதலாளித்துவத்தின் செவிக்கும் எட்டுமோ?......அதெப்படி எட்டும்?......இந்த சங்கொலி அந்த செவிடர்களின் காதுகளுக்கா எட்டும்?

முகலாய மன்னவரா இந்த அக்பர்? ஆம். அவரேதான்! அதோ ஹிந்துக்களும், ராஜபுத்திரர்களும, மகம்மதியர்களும் ஒற்றுமையாய் வாழ அரசுபுரிகிறார்! இந்த அரசர் "ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையின்றி சுதந்திரம தரமுடியாது" என்று கூறும் வியாபாரிகளின் கண்ணிற்கு புலப்படவில்லையே? அன்றி பாகிஸ்தானில்தன் சுகஜீவனம் நடத்த இயலும் என்னும் எண்ணமுடைய அந்த "லீக்" பிரமுகருக்குத்தான் புலப்படவில்லையே? ஏன் தேவி இந்த வஞ்சனை?

என்னுள்ளத்தைக் கொள்ளைக்கொள்ளும் மராட்டிய மன்னவா! வாரும்!! வாரும்!!! உம்பெருந்தன்மையான குணம் எங்கே? உன் வீரம் எங்கே? உம் தந்திரம் எங்கே? 40 கோடி மக்களில் உம் போன்ற வீர ஆத்மாக்கள் 40 இருந்தால் இந்த நாடு அடிமைப்பட காரணமே இருக்காது அல்லவா?

காதலனை அவமானப்படுத்திய தந்தைக்கு அவமானம் விளைவித்த காரிகையே! வீரசம்யுக்தையே! நமஸ்தே! காதலுடன் ஒன்றுபட்டு காதலுக்கு தலைவணங்கிய உன் பரிசுத்த உடல் பிறந்த இந்த நாட்டில் காதலனை ஏமாற்றிவிட்டு கள்ளக் காதலர்களுடன் சுற்றும் கள்ளிகளை காண்கையில் கண்கள் பொங்குகிறதே! இந்தக் கள்ளிகளின் கண்கள் உம் முன்மாதிரியை பார்க்காமலிருப்பதற்கு காரணம் என்ன? குருடா?

ஹா! ஷாஜகான்!! உம்மை எப்படி மறக்க முடியும்! அதோ பேரொளி வீசிக்கொண்டு நிற்கிறது உமது தாஜ்மஹால்! அந்த எழில் மிகு கட்டிடத்தை உம் ஞாபகமாக பாரதமக்களுக்கு அளித்தீர். ஆனால் இந்த வியாபாரிகள் எதை வைத்துவிட்டுப் போகப் போகிறார்கள்?......ஆம்! அவர்கள் செய்த அக்கிரமங்களே அவர்களை நினைப்பூட்டும் ஞாபகப் பொருளாயிற்றே!

ஓ! கிளைவ் நீ தற்கொலையா செய்துகொள்ளவேண்டும்? இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்த எத்தனை பாடுபட்டாய்? உன் தொழிலையும்கூட (வியாபாரம்தான்) அல்லவா மறந்தாய்? அப்படி பாடுபட்ட உன் கதியே இப்படியானால் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கும் தற்கால பிரமுகர்களின் கதி என்னவாகும் கிளைவ்?

ஜான்ஸி ராணி! ஹா! வீரப்பெண்ணே! உன் வீரம் எங்கே? உன் அரிய வீரம் இந்தியப் பெண்மணிகளுக்கு சிறிதாவது இருந்தால் ஏனையோர் வெட்கித் தலைகுனிய மாட்டார்களா? வாள் ஏந்தின வனிதையே! கத்தியைப் பிடித்தக்காரிகையே! உன்னை போற்றுகிறேன். உன் பெயரே இ. தே. ரா.விற்கு ஓர் சக்தியை கொடுத்தது! இதோ! உன்னை நாங்கள் மறக்கவில்லை. உன் பெயரால் எத்தனை படைகள் நிறுவப்படுகிறது பார்!

தேவீ! போதும் காட்சி! உம் காட்சியே இந்தச் சோம்பிக் கிடக்கும் இந்திய வாலிபரை தூக்கி யெழுப்பும் சக்தியாயிருக்கிறது! தேவீ! தேச பக்தியற்ற இளைஞர்களுக்கு இந்த உன் காட்சிகளைக் காட்டு அப்பொழுது அவர்களது உயிரற்ற உடல் ஜீவ ரத்தம் பாயப்பெற்று உணர்ச்சியுள்ள மனிதர்களாகி விடுவார்கள். மறு நிமிடமே கடையை கட்டுவார்கள் வியாபாரிகள்!

# எதிர்பாராத ஜோஸ்யம்

J. Sundaram, H. M. PannanKombu

(இரு ஆரம்ப ஆசிரியர்களின் சம்பாஷணை)

ஜான். : குட்மார்னிங் ஸார். சுகமாக இருக்கிறீர்களா?

ராஜு. : சுகம் தான். சுகத்திற்கென்ன.

ஜா. : என்ன வருத்தத்துடன் சொல்லுகிறீர்கள். வீட்டில் ஏதாவது விரட்டல் மிரட்டல் கிடைத்ததோ?

ரா. : அப்படி ஒன்றுமில்லை. காலத்தின் கஷ்டத்தை நினைத்து வருந்துகின்றேன். குடும்பத்தின் எண்ணிக்கையோ வளருகிறது. பொருள்களின் விலையோ ஏறுகிறது. ஆசிரியரின் சம்பளமோ பேசாமல் படுத்துகிடக்கிறது. இதில் ஆசிரியர்களுக்கு என்ன சந்தோஷம்.

ஜா. : சம்பளத்தைப் பற்றி பிரமாதமாக பேசிவிட்டீர்களே! உங்கள் படிப்பு என்ன?

ரா. : 5. வகுப்பு படித்து லோயர் கிரேடு பாஸ்செய்து பல வருஷங்கள் வேலை செய்து அனுபவத்தில் அறிவைப் பெற்று ஹையர் கிரேடும் பாஸ் செய்துவிட்டேன். இன்னமும் பெரிய பரீட்சையிலும் வெற்றிபெறுவேன்.

ஜா. : மிகுந்த சந்தோஷம். இப்பவும் அறிவை விருத்தி செய்கிறீர்களா? அல்லது முற்றுப் புள்ளி குத்திவிட்டீர்களா?

ரா. : ஆமா, இனி நமக்கு என்ன விமோசனம் கிடைக்கப் போகிறது. நம்மைவிட அதிகம் படித்தவர்கள் கூட நம்மிடம் விழிக்கிறார்கள். நமக்கு அறிவு இருந்து என்ன பயன்? எந்தத் துறையிலும் உத்தியோக உயர்வு, சம்பள உயர்வு உண்டு. ஆனால் ஆசிரியர் தொழில் ஏணி, தோணி, நார்த்தங்காய் மாதிரி இருந்த நிலையைவிட்டு விலக விமோசனம் கிடையாது. வரும் பிள்ளைகளை போகவும் வரவும் மாற்றிக்கொண்டே இருக்கிறோமே தவிர வாத்தியார் வாத்தியாரே. இதில் அறிவை என்ன விருத்தி செய்வது. பெரிய டிப்ளமோ கிடைக்கிறதா. விடுங்கள்.

ஜா. : அப்படி சொல்லாதீர்கள். அதிர்ஷ்டம் இருக்கு உங்களுக்கு. நான் ஒரு ஜோஸ்யம் சொல்லுகிறேன்.

ரா. : ஆ......அது என்ன?...அவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்.

210003

ஜா.: நீங்கள் 1950-வது வருஷத்திற்குள் S. S. L. C. பாஸ் பண்ணப் போகிறீர்கள்.

ரா.: இது நினைவா? கனவா? என்ன ஜோஷ்யம். நடக்கக்கூடிய காரியமா? முழு பூசனிக்காயை சோற்றில் மறைத்த மாதிரி. நம்பமாட்டேன்.

ஜா.: உலக மாறுதலே உங்களுக்கு தெரியவில்லையே. ஏதாவது பத்திரிகை வாங்கி வாசித்து வருகிறது தானே.

ரா.: என்னங்க, சட்டென்று அப்படி சொல்லிட்டிங்க. என்ன பத்திரிகை வேண்டும். இதோ பாருங்கள்.

ஜா.: எல்லாம் வாங்கி இருக்கிறீர்கள், ஆனுல்.........

ரா.: ஆனுல்.........என்னங்க...

ஜா.: ஆசிரியருக்கு முக்கியமானது வாங்கவில்லையே. அப் பத்திரிகை வாங்கி இருந்தால் இப்பொழுது சந்தோஷமாக இருப்பீர்கள்.

ரா.: அது என்ன பத்திரிகை.

ஜா.: இதோ பாருங்கள் மார்ச் 15-ந் தேதி வெளி வந்த பூங்கொத்து.

ரா.: (சிறிது வாசித்துவிட்டு) ஆ! இதுவரை இதன் சிறப்பு தெரியவில்லையே. சர்க்காரால் வெளியிடப்படும் உத்திரவுகளை கிராமத்திலிருந்துகொண்டே மற்றவர் உதவியின்றி அறிந்துகொள்ளலாம்போல.

ஜா.: பிறகென்ன. இது என் உயிர் பத்திரிகை. ஒவ்வொரு மாதமும் 15-ந் தேதியில் எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன். கிடைத்தவுடன் தங்களைப் போன்ற (இப்பத்திரிகையின் விபரம் தெரியாதவர்களுக்கு ஜோஷ்யம் சொல்லி வருகிறேன்.

ரா.: நல்ல ஜோஷ்யம். உள்ளது உள்ளவாறு பலிக்கும். அடுத்த மாதத்தில் நான் தங்களுக்கு ஜோஷ்யம் சொல்லுவேன்.

ஜா.: எப்படி முடியும்?

ரா.: இன்றைக்கே பூங்கொத்தின் சந்தாதாராகப் போகிறேன்.

ஜா.: சந்தோஷம். வந்தனம் போய்வருகிறேன்.

# இருண்ட இதயம்

## [கோஹினூர்]

[இருண்ட இருதயத்தில் வெளியாகும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல!]

(கொத்து 36, மலர் 12, பக்கம் 212-ன் தொடர்ச்சி.)

இதற்குமேல் கேட்க முடியாது இழந்த மனதுடன் நின்றேன். கண்ணீர் பிரவாகம் இமைகளை பெயர்த்துக்கொண்டு கிளம்பியது! "ஹா! என்னிதயராணிக்கு துன்மார்க்கன்—குடியன்—வெறியனு மணமகனுகக் கிடைக்கவேண்டும். பைத்தியத்தைத் தெளிவிக்க அல்லவா ஜோதி இறந்துவிட்டாள் என்று சொல்லியிருக்கிறூர்கள். ஹா! விதவையான என் கண்மணியைப் பார்க்காது நான் இனி அரைக்ஷணம்கூட தாமதிக்க முடியாது" என்று மனம் குழம்பியது. நேரே துரையிடம் ராஜினமா எழுதிக்கொடுத்துவிட்டு இத்தனை நாளாகச் சேர்த்துவைக்கப் பட்டிருந்த லக்ஷம் வெள்ளியையும் எடுத்துக்கொண்டு ஹென்றியையும் கூட்டிக்கொண்டு கப்பலில் ஏறினேன். கப்பல் புறப்பட்டது. ஹென்றியிடம் அவனது மண விஷயமாக செல்வதாகவே கூறினேன்! ஆம்மாம்! ஜோதியின் மகள் சுடர்மணியை ஹென்றிக்கு முடித்துவிடுவது என்பதை என் உறுதியான யோசனையாக இருந்தது! கப்பலில் கண்ணீரோடு பிரயாணம் செய்தேன்! என் இருண்ட இதயத்தில் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் மின்னியது. ஆனல் இருதயம் இருண்டது இருண்டபடியேதானிருந்தது!

மதறுவில் இறங்கி மறு ரயிலிலேயே லால்குடி வந்தேன். லால்குடியில் இறங்கி திண்பண்டங்கள் நிறைய வாங்கிக்கொண்டு ஹென்றியையும் கூட்டிக்கொண்டு மேட்டூருக்கு நடக்க ஆரம்பித்தேன். 3 மைல்தானே! ஒரே மணி நேரத்தில் வந்துவிட்டோம். ஹென்றியை ஊருக்கு வெளியே நிற்கவைத்துவிட்டு "நீ இங்கேயே இரு 30 நிமிடத்தில் கூட்டிக்கொண்டு போகிறேன்" எனக் கூறிவிட்டு அவனை அங்கேயே நிற்க வைத்துவிட்டு ஊரைநோக்கி வேகமாய் நடந்தேன்.

சிறிது தூரம் சென்று திரும்பிப்பார்த்தான். ஹென்றியை! பலே! திருட்டுப்பயல்! பக்கத்தில் ஒரு மதகில் குளித்துக்கொண்டிருக்கும் ஒரு யௌவன கன்னிகைப்பக்கம் பார்த்துக்கொண்டே இருந்தான். அவளும் அவனைப்பார்த்து புன்சிரிப்புடன் குளித்தாள். இருவரும் ஒருவரையொருவர் அன்பு வழிய நோக்குவது என் இதயத்தில் இரும்புச் சம்மட்டியால் அடிப்பதுபோலிருந்தது! காந்தாவின் ஆணைக்குப்பணிவேனு? அல்லது இந்த காதலர்களின் ஆணைக்குப்பணிவேனு? என்று மனங்கொதித்தவண்ணம் ஊருக்குள் சென்றுவிட்டேன். "திருச்சி யோசேப்பு மனைவி ஜோதி அம்மாள் வீடு எது?" என்று கேட்டேன் ஒரு பெரியவரை! "கீழக்கடைசியில்தானிருக்கிறது நீங்கள் யார்?" என்றூர் அவர். அவருக்குப் பதில் சொல்லத் தோன்றூது, வேகமாகக் கீழக்கடைசிக்குச்சென்று விசாரித்து

வீட்டையறிந்துகொண்டு வீட்டுத்திண்ணையில் அமர்ந்தேன். உள்ளே ஒரே புலம்பல் மயமாக இருந்தது! அத்தையின் ஈனஸ்வரப் புலம்பல் என்னிருண்ட இதயத்திற்கு துக்கத்தையும் தரவில்லை! ஆறுதலையும் தரவில்லை! என்ன செய்வது என அறியாது மரம்போல் நின்றுகொண்டு புலம்பலைக் கவனித்தேன்! கண்ணீர் தரையை நனைத்துக்கொண்டிருந்தது.

## 8 உடைந்த உள்ளம்

"ஹா!...... ஸாம்!...... (விம்மலுடன் கூடிய அழுகை) உன்னை அநியாயமாக அடித்துத் துரத்திவிட்டேனே!...... தம்பீ!...... அன்று அத்தை!...... என்று அழைத்தபோது பணத்தினால் மூடப்பட்ட...... இந்தப் பாழும் கண்கள்...... உன்னை வெருட்டி துரத்திவிட்டதல்லவா? ......ஐயோ!...... 19 வருடத்திற்கு முன்பு...... (பெருமூச்சு)......ஹா! ......என்னுருயிர் மகள் மீது வைத்த அளப்பரிய பிரியத்தையறியாது...... (கண்ணீர் வழிய கதறி) உன்னை கலங்கவைத்தேனே!...... ஆமாம்! அதே சாபந்தான்!...... ஸாம்! அதே சாபம்தான்!!...... இன்று என்னை இந்தக் கோலத்தில் வைத்துவிட்டது!...... மகனும், மருமகளும் விரட்ட......மருமகன் வேலைக்காரியைக் கூட்டிக்கொண்டு ஓட...... மகளும் தன்னந்தனியாக தன் மகளுடன் ஏங்கிநிற்க...... ஹா!... யாவும் உன் சாபந்தானு? ......உன்னை மருமகனுக அடைந்திருந்தால்......ஸாம்!...... (பெரு மூச்சுடன்) தம்பீ!...... எனக்காக இல்லாவிட்டாலும்...... என் மகள் மீது வைத்த உயரிய பிரியத்தினுல்......பிச்சையெடுத்தும் எங்களை........."

"அம்மா! (கோ என கதறி) தாயே!......என் இந்தக் கனவு? என் இந்த கற்பனை? என் இந்த சூரிய நமஸ்காரம்?—கண் கெட்ட பிறகு! என் வாழ்க்கையைக் குலைத்தீர்கள், அவருடைய வாழ்க்கையையும் குலைத்தீர்கள் பாவையான என்னை பணம் என்னும் பாதாளத்தில் பலியாக்கினீர்கள்!...... மாசற்ற என் காதலனை (பெருமூச்சு) மண்டையிலடித்து வெருட்டினீர்கள்... இப்பொழுது அவரை நினைத்துப் புலம்புகிறீர்கள்... அவர் வரமாட்டார்...... இந்தத் துரோகியை அவர் மறக்கமாட்டார்...... அத்துடன் மன்னிக்கவும்மாட்டார் "...... தாயே! வீணுகப் புலம்பாதீர்கள் ......பேசாது படுத்திருங்கள்......இதோ......வருகிறேன்."

ஜோதி... என்னிதய ராணி... தாங்க இயலாத அழுகையுடன் ஒரு அறைக்குள் சென்ருள் அத்தை கட்டிலில் படுத்து ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தார்கள். நான் சந்தடி செய்யாமல் ஜோதி நுழைந்த அறைக்குள் எட்டிப்பார்த்தேன். அத்தைக்கும் நான் அவர்களைக் கடந்து சென்றது தெரியவில்லை! ஜோதியைப் பார்த்தேன்! "கட கட" என பொங்கிவரும் கண்ணீருடன் என் படத்திற்குமுன் மண்டியிட்டுப் புலம்பிக் கொண்டிருந்தாள்!???

"ஸாம்!.......(பெருமூச்சுடன்) என்னுருயிர் காதலா!.......நான் பெரும் பாவி!......அந்தோ......அந்த கடைசி நாளில்......ஸாம்!......

என்னருமை ஸாம் !!...(பெருமூச்சு) "ஜோதி......என்னை நினைத்து கண்ணீர் விடும் காலம் வரும்......அப்பொழுது பணமும் அழகும் உன் கண்ணீரை துடைக்காது......என் கண்ணீர்தான் உன் கண்ணீரை துடைக்க வேண்டும்......(ஆழ்ந்த பெருமூச்சுடன்) நல்ல அரிய தீர்க்கதரிசனம்...... அன்று கடைசி நாள் கண்ணீர் விட்டு நின்ற நீர்......இப்பொழுது எங்கிருக்கிறீர்?......இறந்துவிட்டீரா?......ஐயோ!......பணத்திற்கும்......அழகிற்கும் பலியிடப்பட்ட என்னை பார்க்கக்கூடாதென்ற வைராக்கியமா?...... "என் வேண்டுகோள் ஒன்று உண்டு" என்றீரே!...என்ன அது? நீர் மணம் செய்து வாழ்வதாக அறிந்தால்......என் இந்த இருண்ட இதயத்தில் ஓர் மின்னலாவது தோன்றுமே!......கண்ணா!......என்ன வைராக்கியமிது!......தினமும் நான் புலம்பும் இந்தக் கூக்குரல் உம் செவியில் என் எட்டவில்லை?......நான் பாவியா?......கடமையைச் செய்த நான் உனக்கு காலனா?...(விம்மி விம்மி அழுதுகொண்டே) உம் சந்தோஷ வாழ்க்கைக்கு நர பலி வேண்டுமானால் சொல்லுமே!...... நானே என்னை உமக்கு பலியிடுகிறேன்......என்னருமை மகள்......ஆமாம்......என் இரத்தம் அவள் ......அவளில்லாவிடில் இதோ இன்றே மரித்திருப்பேனே!...... தெய்வமே!...மரத்தில் கொடியை தாவவிட்டு செழிப்பாக-ஆனந்தமாக-ஆராத காதலுடன் பற்றும்பொழுது அறுத்தெறியும் தோட்டக்காரனையொத்த தெய்வமே!...... !எனக்கு விமோசனம் இல்லையா?........."

இதற்குமேல் கேட்க மனமற்ற என்மனம் துடித்தது. அவளது கேள்விக்கு பதிலாக ஆழ்ந்த பெருமூச்சுடனும், ஆறாத கண்ணீர் பெருக்குடனும் "உண்டு" என்றேன். கண்கள்—என் வறண்ட ஒளியற்ற கண்கள்—அந்த ஜீவனற்ற உயிரோவியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தன! திடுக்கிட்ட ஜோதி திரும்பினாள்! என்னைக் கண்டதும் "ஸாம்" என்று பலத்த கூக்குரலுடன் ஓடிவந்து என் கால்களில் முகத்தை பொதிந்து கொண்டாள். எலும்பும், தோலுமாய் இருந்த என்னை அவளது அந்தராத்மா அடையாளம் கண்டுபிடித்தது எப்படி ஆச்சரியமாகும்? விக்கி விக்கி அழுதுகொண்டே இருந்தாள். அந்த அழுகை அவளுக்கு ஆறுதலளித்ததுபோலும்! நானும் "ஜோதி அழாதே" என்றேன். நொந்த இதயத்திற்கு, வெந்த இதயம் இதைத் தவிர என்ன ஆறுதல் கூற முடியும்?

அவளைத் தொட்டு தூக்க இந்தக் கரங்கள் கூசியது. "எழுந்திரு" என்று வாய் மாத்திரம் பன்முறை சொல்லியது! அவளும் என் கால்களை விட்டு எழுந்திருக்கவில்லை. என்பாதங்கள் அவளது கண்ணீரால் நனைந்தன! "ஜோதி இதற்குத்தானா இங்கே வந்தேன் எழுந்திரு (ஆழ்ந்த வெறுப்புடன்) கண் கெட்ட பிறகு என் இந்த சூரிய நமஸ்காரம்?" என்றேன். அவள் எழுந்துகொண்டாள். நான் உடனே "ஜோதி!...... (ஆழ்ந்த பெருமூச்சுடன்) உன் கணவன்.........(அழுதுகொண்டே) நீ விதவை......அவன் சிங்கப்பூரில் இறந்துவிட்டான்......" என்றேன் புன்

சிரிப்புடன் "15 வருடங்களுக்கு முன்மே இறந்துவிட்டானே அவன்!... என்னிதயத்தில் அழியாது வீற்றிருக்கும் இன்பக் காதலன் எனக்குக் காட்சி அளிக்கையில் (பெரு மூச்சுடன்) நான் எப்படி விதைவையா வேன்?" என்ருள். நான் ஆழ்ந்த பெருமூச்சுவிட்டேன்! ஜோதி கண் ணீருடன் "அத்தையைப் பார்த்தீர்களா? உங்களுக்கு மணமாகிவிட் டதா? இன்னும் என்ன என்னமோ கேட்க மனந்துடிக்கிறது! எதைக் கேட்பது எனத் தெரியவில்லை" என்ருள் நான் ஒன்றும் பேசாமல் மல் சுருக்கமாக "எனக்கு மணமாகிவிட்டது. 19 வயதுள்ள ஓர் மக னுண்டு......வா அத்தையிடம் போகலாம்" என்றேன். இருவரும் நீர் மல்கிய கண்ணீருடன் அத்தையிடம் சென்ருேம். (தொடரும்).

---

## பாடசாலை ஒழுங்குமுறை

[Sri N. R. Nanjundeswaran]

(கொத்து 36, மலர் 12, பக்கம் 199-ன் தொடர்ச்சி.)

### வெகுமதிகள் (Gifts)

சிறுவர்கள் பொறுப்பை உணராதவர்கள்: அவர்களை தண்டனைகளா லும் தண்டிக்கப்படுவோர்கள் என்ற பயத்தின் மூலியமாகவும் ஒழுங்காக நடக்கும்படி வற்புறுத்துகின்ருேம். நாளடைவில் ஒழுக்கத்தைப் பின் பற்றுவது அவர்களுக்கு ஒரு பழக்கமாக அமைந்துவிடுகின்றது. தண் டனைகளைப் போலவே சிறுவயதில் மாணவர்களை ஒழுங்கு முறையில் பயிற்சிப்பதற்காக வெகுமதிகளையும் நாம் கையாளலாம். பரிசுகளுக்காக நல்ல பழக்க வழக்கத்தை அனுசரிக்கும் மாணவர் பிற்காலத்தில் யாவற் றையும் எதிர்பாராமலே ஒழுக்கத்துடன் நடந்துகொள்வான்.

ஆனல் இப் பரிசுகள் விரும்பத்தகாத போட்டிக்கும் பொருமைக்கும் இடங் கொடுக்கும்; ஆதலால் நாம் பின்வரும் விதிகளை அனுஷ்டித்தல் நலம்:—

1. இப்பரிசுகள் யாவருய் எளிதில் அடையக்கூடாததாய் இருத்தல் வேண்டும். ஒரு மாணவரின் விசேஷ புத்திக்கூர்மைக்கோ அல்லது விசேஷ உழைப்பிற்காக அளிக்கப்படவேண்டும்.

2. அதிகமாகப் பரிசுகள் அளித்தல் கூடாது. அவ்விதம் அளித் தால் அப்பரிசுக்கு மதிப்பிராது.

3. இப்பரிசுகள் அதிக விலை மதிப்புடையதாய் இருத்தல் கூடாது. அவ்விதம் இருந்தால் தகாத வழிகளில் போட்டி எற்படும்.

4. பரிசுகள் மாணவர்களின் புத்தி கூர்மைக்கு மாத்திரம் அளிக்கா மல் நடத்தைக்கும் உழைப்பிற்கும் கூட அளிக்கப்படவேண்டும்.

5. கூடியமட்டும் நாம் அளிக்கும் பரிசானது உபயோகப்படக்கூடிய தாய் இருத்தல் வேண்டும்.

## வெகுமதிகளின் வகைகள்

1. நற்சாட்சிப் பத்திரங்கள்.
2. கௌரவப் போர்ட்
3. பதக்கங்கள் : நடத்தை, ஒழுங்கு, உழைப்பு, விளையாட்டில் தேர்ச்சி முதலியன.
4. சிவப்புப் புள்ளி பதிவுகள்.
5. பொருள்கள்.

## பொய் சொல்லுதல்

நம் மாணவ மாணவிகள் பொதுவாக 4 விதங்களில் பொய் சொல்லலாம். பொய் சொல்வதின் காரணம் :
நிவர்த்திக்க வழி :—

1. அறியாமையால் : புத்திசொல்லல் ;
2. பயத்தால் : உபாத்தியாயர் சாந்தமாய் நடத்துதல் ;
3. பிறரை மோசம் செய்ய : தண்டனை ;
4. கற்பனையால் : கதை சொல்லச் செய்தல்.

II. **கோள் சொல்லல்** :—உபாத்தியாயர் இதற்கு இடங்கொடுத்தல் கூடாது.

III. **காப்பியடித்தல்** :—பள்ளிக்கூடத்தில் காப்பி அடித்தல் தீங்கு. பள்ளிக்கூடத்தின் நற் பெயருக்குப் பங்கம் ஏற்படும் என்பதை வற்புறுத்தல் வேண்டும். சரிவரப் படிக்காததினால் காப்பியடிக்கலாம். ஆகையால் சரிவரப்படிக்கும்படி செய்வித்தல் வேண்டும்.

IV. **பிடிவாதம்** :—பெண்களிடம் தான் அதிகம். காரணம் : அறியாமை, பயம், கோழைத்தனம், கோபம் : புத்திமதி சொல்லி நீக்கவும்.

V. **பள்ளிக்கூடம் போகாமல் திரிதல்** :— காரணம் : கண்டிப்பு—உற்சாகமில்லாத போதனை, உபாத்தியாயரிடம் பயம், 10 வயதுக்கு மேல் இவ்விதம் செய்தால் தண்டனை. 10-வயதுக்குள் இவ்விதம் செய்தால் விளையாட்டு, கலா திட்டத்தின் புறவினைத் தொழில்களில் ஈடுபடச் செய்து சீர்திருத்தல் வேண்டும்.

VI. **துர்ப்பழக்கம்** :—இதனை நீக்கப் பெற்றோர்களை அணுகி புத்தி கூறச் செய்தல்.

VII. **கவனக் குறைவு** :—இதனை நீக்க ஆசிரியரது திறமையான போதனை தேவை.

VIII. **மாணவரின் சரீர சுகம்** :—வைத்தியப் பரீட்சை மூலம்.

XI. **காலந் தவறாமை** :—ஆசிரியரது முன்மாதிரி அவசியம்.

ஒரு பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள் எல்லோரும் ஒத்துழைத்து மேலே கண்டவைகளெல்லாம் அனுசரித்தால் பாடசாலையின் வேலை சரியான ஒழுங்கு முறையில் நடைபெறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

# ஓர் கதை

## [N. Bedhu.]

### ஊளளின் உவப்பும், தவிப்பும், இறப்பும்.

குயவன் ஒருவன் ஓர் அழகான வாத்தொன்றை நெடுநாளாக வளர்த்து வந்தான். தன் தலைவன் தன் பேரில் தயை இல்லாமல் தடியால் தாக்குவதாலும், அன்பில்லா ஆகாரத்தை அளிப்பதாலும் வாத்தின் மனப் படகு, கவலைக்கடலில் மூழ்கியது. வனப்புள்ள வாத்தின் கவலையானது, தன் இருப்பிடத்தை விட்டு வெளியேறவும் தூண்டிற்று. கடந்து, களிப்பு கூத்தாடும் இடத்தையடைய நற்தருணத்தை பலநாட்களாக எதிர் நோக்கிக்கொண்டு, பொறுமையால் கவலையை மறைத்து காத்திருந்தது.

புலால் வெறிகொண்ட குள்ளநரி ஒன்று, காடு, மேடு, மலை முதலியவைகளையெல்லாம் தேடியலைந்து, முடிவாக ஊர்க்கோடியிலுள்ள குயவன் இல்லமண்டை வந்தது

நண்பன் வாத்தைக்கண்ட நரியாரும் க்ஷேமலாபங்களை விசாரித்தது. தன் கவலையைக் காற்ருய்ப் பறக்கவைக்கும் நரியைக்கண்ட வாத்து சாஷ்டாங்க தண்டம் செய்தது.

உச்சி குளிர்ந்த நரியும் தன் தந்திர கயிற்றை அவிழ்த்தது.

நண்பரே! "தங்கள் முகம் விசன குளத்தில் குளித்துக்கொண்டிருப்பதின் காரணம் என்ன?"

அன்பரே! "கரையேற வழியின்றி, இன்னும் குளத்தில் குளித்துக் கொண்டிருக்கிறேன். கரையேற வழிகாட்ட வல்லோர் காருண்ய நண்பனை நீரே என சென்ற தினம் கனவு கண்டேன், இன்று கனவும் நனவாயிற்று."

நற்குண! "நினது வியாகுலத்தின் வித்து என்ன?"

வாத்தும், தன் கவலைகளை எல்லாம் ஒன்றுவிடாமல்......விளக்கிற்று.

நண்பா! "தீர்க்கவல்ல குள்ளன் யானிருக்க நீர் கவலைப்படக் காரணமே இல்லை. ஆதலால் கவலையைக் கடல் தாண்டி கடத்தி விட்டு, நான் கூறும் உபாயத்தை உற்றுக்கேள்."

"பக்கத்தில் நளாயினி என்ற ஓர் நதி ஓடுகிறது. நதியைக்கடந்து ஓர் சிறிய தீவு உள்ளது. தீவைச்சுற்றிலும் தண்ணீர் ஓடுகிறது. அங்கு நின் இனக்கூட்டம் ஒன்று வாழ்ந்து வருகின்றது. சென்ற ஆண்டு, நானும் உல்லாசப் பிரயாணமாகச் சென்று, அங்கு ஓர் வாரம் தங்கிவிட்டுவந்தேன். தங்கள் இனக்கூட்டத்தின் தலைவர் நற்குணம் கொண்டவர்; யாரிடமும் பிரியமாய் பேசுவார்; யாரும் விரும்பும் வஸ்துவை விருப்புடன்கொடுப்பார்; தான் தங்கியிருந்த ஒரு வாரமும் எனக்கு ஓர் ஆருயிர் நண்பராய் இருந்தார். குழுவின் அதிபதி, அத்தீவை பல இலாகாக்களாக பிரித்துள்ளார் கல்வி இலாகா, போலீஸ் இலாகா, வைத்திய இலாகா......முதலியன.

ஒவ்வோர் இலாகாவுக்கும் ஒவ்வோர் சிறுகுழு வேலை பார்த்து வருகின்றது. ஆதலால் தாங்களும் ஆங்கு செல்ல விரும்பினால், தங்கள் இனத்தாரோடு, தங்களையும் ஓர் மெம்பராகச் சேர்க்க நான் கூடிய மட்டும் சிபார்சு செய்கிறேன்.

மேலும், நான் தண்ணீரில் நீந்த பழக்கமில்லாதவனாய் இருப்பதால், தங்கள் முதுகின் பேரில் நான் உட்கார்ந்து கொள்ள, தாங்கள் தண்ணீரில் நீந்தி, என்னை அக்கரை கொண்டு சேர்ப்பீரானால், பின்பு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன். ”

வாத்தும், நண்பன் நரி கூறிய உபாயத்தை ஆமோதித்து, இறும்பூதெய்தியது.

அன்று இரவு பன்னிரெண்டு மணிக்கு இரண்டும் நளாயிணியைக் கடந்து தீவை அடைந்தன.

வெறிகொண்ட *ஊளாள், தன் தந்திர வஞ்சனையான துர் எண்ணத்தை சிறிதும் இரக்கமின்றி பகன்றது.

நெருப்பில் விழுந்த புழுபோல் துடித்த வாத்து, நன்றி நழுவிய நரியிடம் ஓர் உபதேசம் செய்தது.

நன்றி கெட்ட நண்பரே! “ எனது ஆத்மா இப்பொழுது சாந்தி அடையப் போவது திண்ணம். சக்தியுள்ளோன் ஒருவன், சக்தியற்றோனை தன் தாந்திரிகத் தன்மையால் தாக்குவது தண்ணீர் பட்டபாடு, ஆனால் சக்தியுள்ளோன், தன் தலைக்கு தடியடி அத்தருணமே அகப்படும் என்று அப்பொழுது அறியான். ”

போலி பிரியரே!! “ எளியாரை வலியார் வாட்டினால் வலியாரை தெய்வம் வாட்டும்” என்னும் முதுமொழிகளை தங்கள் மனதில் வேரூன்ற முடிவாக தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ”

வாத்து கூறிய பொன் மொழிகளை, பொன்னை தன் காதுகளில் உருக்கி ஊற்றினதைப்போல் ஊளள் கேட்டு ஒரே பாய்ச்சலாப் பாய்ந்து, வாத்தைக் கொன்று தின்றது.

தின்று ஏப்பம் விட்ட ஊளள், ஏதோ ஒன்றை எண்ணி, ஏங்கித் தவித்தது. தன் இருப்பிடத்திற்கு ஏக வழியின்றி திகில்கொண்டு திகைத்தது. நதியைக்கடக்க நீந்தும் பழக்கம் இன்மையால், தன் மனதைநோக்கி ஓர் வழி கூறும்படி வேண்டி நின்றது. வழி புலப்படாத மனதும் மௌனமுற்றிருந்தது.

ஆதலால் தந்திரமுள்ள நரி, அத்தீவில் உண்ண ஆகாரமின்றி, ஆறு நாட்கள் அரும் பாடுபட்டு, விண்ணுலகை யடைந்தது!

**“ நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் ”**

---

* நரி.

# புழுதிபடிந்த பொன் மொழி

(D. Nathamuni, T. P.)

'பந்திக்கு முந்திக்கொள் படைக்குப் பிந்திக்கொள்' என்ற பழமொழிக்கு படைக்கப் பிந்திக்கொள்ளெனத் திருத்தி விருந்தினர் பந்தியில் உண்பதற்கு முன்னரே உணவு படைப்பவர்களாகிய விருந்தினரை உபசரிப்பவர்கள் (வீட்டுக்காரர்) தாங்கள் நன்றாக உண்டுவிட்டுப் பின்னர் அவர்களை உபசரித்தல் வேண்டும் என்பதே. அதன் கருத்தை சின்னாட்களுக்கு முன்னர் ஓர் தமிழ் வார இதழில் வரைந்திருந்தது.

தமிழ் நாட்டுப் பழமொழிகள் யாவும் மிகச் சிறந்த கருத்துக்களைக்கொண்டே விளங்குவனவாதலின் அவற்றைப் பொன்மொழி என்று புகலுகின்றனர். அவ்வாறிருக்க மேலே கண்ட பொருள் எவ்வாற்றானும் சிறந்ததுமன்று தமிழருக்கு ஏற்றதும் அன்று என்பது நோக்குவார்க்கு எளிதில் காணக்கிடப்பதாகும். தமிழ் மறையாய் திருக்குறள், 'செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பர்' அதாவது முதலில் வந்த விருந்தினரை உபசரித்து உணவளித்துப் பின்னர் வரப்போகும் விருந்தினரோடு தான் உண்பதற்காக அவர்களை எதிர்நோக்கி நிற்பதே விருந்தோம்பும் முறையெனக் கூறுகின்றது. ஆதலின் விருந்து புரத்தாது தான் உ ண் ட லு ம், விருந்தினருண்ணுமுன் தான் உண்டலும் தமிழர் கனவிலும் காணவொண்ணாக் கீழ் வழக்கமாகும்.

எனவே அதன் மெய் கருத்து யாதென நோக்குவோம். பண்டைத் தமிழ் வேந்தர்கள் படைக்குத் தலைமை தாங்கி அமர் நடத்தியவர்கள். அவர்கள் போர் செய்ய, நிலைத்த கூலிப் பட்டாளங்களை வைத்திருந்தவர்களல்ல. போர் ஏற்பட்டவுடன் போர்முரசும் முழங்கும். உடனே ஒவ்வொரு வீரனும் தனது நாட்டைக் காக்கத் தானே முன்வந்து கூடுவான். அங்ஙனம் கூடிய வீரர்களுக்கு அரசன் ஓர் பெருவிருந்து அளிப்பான். அதில் தானும் உடன் உண்பான். அவ்வாறு உண்ணும்போது ஒரு வீரன் தன் வலக் கையை நோக்கி, "வல்லமை மிக்க எனது வலக்கரமே! நீ அரசனளித்த உணவை உண்ணுகின்ற இதுபோது விருப்பத்தோடு முன் சென்று உணவை அள்ளுவது

போலவே நாளை அவனுக்காக வில்லேந்திப் போரிடும்போது வில்லின் நாணைப் பின்னிழுத்து போரிடுவதிலும் ஊக்கமும் அன்பும் கொள்ளல்வேண்டும்'' எனக் கூறுங் கூற்ருக அமைந்ததுவேயாகும் இப்பழமொழி.

ஆதலின் வலக்கரம் உண்ணும்போது முன் வந்து உணவை அள்ளலாகிய தன் வேலையைச் செய்வது போலவே போரிடும்போது வில்லின் கயிற்றைப் பின்னிழுத்து அம்பு விடுதலாகிய வேலையையும் செய்யச் சித்தமாய் இருக்கவேண்டும் என்பதுவே இதன் பொருளாகும்.

---

## கிராமவாசிகளின் ஏற்றப்பாட்டு

[ம. குழந்தைசாமி]

(கொத்து 37, மலர் 1, பக்கம் 206-ன் தொடர்ச்சி.)

### 10-ம் பதியம்

இந்த 10-ம் பதியத்தோடு கிராமவாசிகளின் ஏற்றப்பாட்டு முடிவடைகிறது. 10 பதியம் முடிந்தால் 200 சால் கணக்காகும். இதையே கிராமவாசிகள் திருப்பித்திருப்பி பாடியும் வேறு விதமான சம்பாஷணைகளை இடையில் வைத்தும் பாடுகிருர்கள். இவர்கள் நன்செய் நிலங்களுக்கு தினமும் தண்ணீர் இறைக்க வேண்டும். அதற்காக இரவு 2 அல்லது 3 மணிக்கு எழுந்து சென்று சுமார் 1 மணிக்கு 200 சால் வீதம் இறைக்கவேண்டிய 1000 சால்களையும் 5 மணி நேரத்தில் களைப்பில்லாமல் வெய்யில் வருவதற்கு முன்னமேயே இறைத்துவிடுகிருர்கள். இன்னும் அதிக நிலத்திற்குப் பாய்ச்சவேண்டியவர்கள் 2 கபிலை ஏற்றங்கள் வைத்து பண்ணையாள் ஒருவனை வைத்துக்கொண்டு இறைப்பார்கள். கிராம மக்களின் நிலை, ஒரு விதத்தில் பரிதாபகரமானதாயிருக்கிறது. ஒரு விதத்தில் மேன்மையாயிருக்கிறது, ஒரு விதத்தில் மூடத்தனமானதாயிருக்கிறது. இப்படிப்பட்ட கிராமவாசிகளுக்கு ஆரம்ப ஆசிரியரே உயிர்த்தோழன். ஆதலால் ஆசிரியர்களே கிராம மக்களைக் கல்வி, விவசாயம், சுகாதாரம், பொருளாதாரம் முதலிய துறைகளில் முற்போக்கான நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு முற்படவேண்டும்.

(இந்த 10-ம் பதியத்தில் சீக்கிரம் இறைத்துவிட்டு வந்து வெயிலுக்கு முன் வேலைகள் செய்யவேண்டும் என்று தன் மனைவியிடம் கூறுகிறுன்.)

தொண்ணேறியா ஒன்று, தொண்ணேறியா இரண்டு
தொண்ணேறியா மூன்று, தொண்ணேறியா நான்கு
தொண்ணேறியா ஐந்து, தொண்ணேறியா ஆறு
தொண்ணேறியா ஏழு, தொண்ணேறியா எட்டு
துலக்கமுள்ள வெள்ளி, கிழக்கே உதியும் போதே
வானுபோல வெள்ளி, வடக்கே உதியும் போதே
பானுபோல வெள்ளி, பக்கம் உதியம் போதே
மீனுபோல வெள்ளி, முன்னே உதியும்போது
மெதுவாய் எழுப்பிவிடு, (நான்) வேகமாகச் செல்லவேணும்
(பொழுது) விடியும் முன்னே, திரும்பவேண்டும்
வெயிலுக்கு முன்னே, வேலைகளை செய்யவேணும்
காருக்குச் செல்லவேணும், காரியமும் முடியவேணும்
இன்னும் ஒரு நூறு, வல்லப்பானுலே
மெல்ல வரவேண்டும், மாதாவே, யம்மா
மறவேனம்மா உன்னை, மயணேறியா ஒன்று

என்று துவக்கி மறுபடியும் பதியம் பதியமாகப் பாடுவார்கள். ஒவ்வொரு பதியத்திற்கும் ஒவ்வொரு சம்பாஷணைகள் வைத்துப் பாடுவார்கள். பூங்கொத்து வாசிக்கும் ஏனைய பெரியோர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

---

**WANTED** 2 Secondary Grade and 2 Higher Grade Trained Teachers on liberal salary.

Apply for further particulars :—

The Correspondent,
R. C. Higher Elementary School,
Karumathanpatty, Somanur P. O.,
Coimbatore Dt.

---

2/0003
சென்னை 600 008

## சங்கீதம்

(By B. Thomas Victor, Music Teacher.)

### கைத்திறன்

28 நோட் மெட்	பாரதியார் ஸாஹித்யம்	ஆதி—தாளம்

| | | |
|---|---|---|
| கமக ரிஸரி கமக ரிஸரி | கமக ரிஸா | நீ, தா, |
| வெயில்வ ரினும் மழைவ ரினும் | விரிகு டையாம் | கை யே |
| பாப தாத ஸாஸ ரீரி | ஸரிஸ ரிகரி | ஸாநி தா, |
| வியர்வை வரின் ஆற்றும்சிறு | விசிறி யதாம் | கை. யே. |

2 துயிலவொரு மகவைத் தொட்டிலிட்டசைக்கும் கையே
துரிதமுடன் எழுதவொரு தூவிக்கொள்ளும் கையே.

3. மலரெடுத்து நல்ல செண்டு மாலை கட்டும் கையே
வாய்க்கினிய பண்டமெல்லாம் வைத்துதவும் கையே.

4. ஜலமதினில் ஓடம்விட சலிப்பிலதாம் கையே
தரையில் மோட்டார் ரயில் நடத்தச் சமத்துள்ளதாம் கையே

5. கோபுரம்சேர் கோயிலோடு குடிசை கட்டும் கையே
குளங் கிணறு குட்டையெல்லாம் குளித்துதவும் கையே.

6. ஆபரணம் அணிமணிகள் ஆய்ந்துசெய்யும் கையே
ஆடைகள் பாவாடைகளும் ஆக்குமெழிற் கையே.

7. நாடியசீர் நாடடைய ராட்டுருட்டும் கையே
நல்ல கதர் நெய்யமிகு வல்லமைகொள் கையே.

8. பாடியவாய் தேனூறும் பாரதியார் பாடல்
பண்ணமைய பாடுதற்கு பாணி கொட்டும் கையே.

9. மக்களைதம் ஒக்கல் வைத்து வளர்த்திடுமென் கையே
வண்ணமலர் தலைக்கணிந்து வாசமூட்டுங் கையே.

10. தக்க பெரியோர்க்கு மிகத்தான் வணங்கும் கையே
தரணியிலுன் திறமையெலாம் சாற்றலெளிதிலவே.

Reg. No. M. 1534.

## குருடனின் பிரார்த்தனை !

["பாபு" எழுதியது]

ஒளியெனப்புகலும் ஒளியெதுவோ ?
ஒலியேதவிர ஒளியறியேன் !
எளியேன் அறியா ஒளியதனை ;
எனக்கே உரைப்பீர் எஜமானே !
வழியெனப்புகலும் வழியெதுவோ ?
வலியேதவிர வழியறியேன் !
எழிலெனக்கூறிடும் எஜமானே ?
எனக்கே உரைப்பீர் எழிலதனை !

2

அரவு என்றால் அலறுகிறீர் ;
அரவே யறியேன் அகிலிதினில் !
இரவு என்றால் இருளென்பீர்.
இரவேயறிவேன் இகமிதினில் !
துரவு என்றால் தூறும் நீர் ;
தூங்கிடும் பள்ளம் என மொழிவீர் !
பரந்த மாபெரும் பாரிதனை
பார்க்கும் பாக்கியமில்லான் நான் !

3

"மதிபோல் வதனம்" என்றே நீர்,
மானிலமீதில் மங்கைகளை ;
நிதிபெறும் வறியேன் போல்மகிழ்ந்து,
நீர் அவரைத்தினம் புகழுவதேன் ?
விதியெனத்தினமும் மனம்நொந்து,
வீணாய் வாழ்நாள் கழிக்குமென்றன்
கதியினைப்பார்த்து கலங்குவதேன் ?
கண்ணிலேன்—ஆயினும் காவலனே !

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt.. St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. No. Ty.—1, 13—7—1946.